ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை சார்பில்

# மாணவர்களுக்கான கனவு மெய்ப்பட மற்றும் அறிவியல் கண்காட்சி வழிக்காட்டுதல் நிகழ்வு!



◆ திருவள்ளூர்:

பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளை சார்பாக பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி "கனவு மெய்ப்பட" மற்றும் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராக திருவள்ளூர் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி திரு. பி . ரவிச்சந்திரன் அவர்கள் அழைக்கப்பட்டு இருந்தார்.

கல்லூரி மாணவர்கள் தங்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் 100 க்கும் மேற்பட்ட அரிய வகை புதிய படைப்புகளை காட்சிக்கு வைத்திருந்தனர். நீர் அலாரம், கைத் தட்டல் ஸ்விட்ச் ,ஹைட்ராலிக் லிஃப்ட் முப்பரிமான படிமம், ரோபோ கார், நீர் ராக்கெட், மின்காந்த ரயில் என தங்கள் படைப்பின் மூலம் சிறப்பு விருந்தினர், நடுவர்கள், பார்வையாளர்கள் என அனைவரின் கவனத்தை ஈர்த்ததோடு, பாராட்டும் ,சிறந்த படைப்பிற்கான பரிசையும் பெற்றனர்.

இந்நிகழ்ச்சி குறித்து முதன்மை கல்வி அதிகாரி திரு. பி. ரவிச்சந்திரன் மாணவர்களின் கனவு மெய்ப்பட அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும்,பொதுத் தேர்வை எழுத இருக்கும் மாணவர்களுக்கு தேர்வை எவ்வாறு அணுக வேண்டும் என்ற முறையையும், உத்வேகத்துடன் அவர்கள் தேர்வினை சந்திக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கியும், ஊக்கமளிக்கும் உரையை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இவரைத் தொடர்ந்து பேசிய மாவட்ட கல்வி அலுவலர் திரு . கே. ரவி அவர்கள் மாணவர்கள் தங்களின் கனவுகளை மெய்ப்பிக்க பாடுபட வேண்டும் என்று உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து பேசிய ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் தலைவர் முனைவர். திரு. ஆர் . நாராயணசாமி அவர்கள் பேசுகையில், முன்னாள் ஜனாதிபதி டாக்டர். ஏ. பி. ஜே .அப்துல் கலாம் அவர்களைப் போன்று மிகப்பெரிய விஞ்ஞானியாகவும், தன்னம்பிக்கையும் விடா முயற்சி செய்யும் கொண்டு மாணவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்று அறிவுறுத்தினார். அதைத்தொடர்ந்து பேசிய ஸ்ரீராம் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் முனைவர். திரு. கோவிந்த ராஜுலு அவர்கள் கூறியதாவது மாணவர்கள் தங்கள் முன்னோடியாக தங்களுக்குப் பிடித்தவர்களின் நல்ல வழிகளை பின்பற்றி வாழ்க்கையில் உயர வேண்டும் என்று வாழ்த்தினார்.

அடுத்ததாக பேசிய ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர். பி. ஆர். ரமேஷ்பாபு அவர் கள், அவர்களையும் வரவேற்று பேசினார்.

மாணவர்கள் பயன்பெறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சி கணிப்பொறியியல் துறை பேராசிரியை பிரவீனா அவர்களின் நன்றி உரையுடன் இனிதே முடிவடைந்தது.